# வினைச்சொற்கள்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



# நட (nada)

walk

சிறுவன் கரடி பொம்மையுடன் நடந்து செல்கின்றான்.



# ஓடு (odu)

run

குமரன் வேகமாகப் புல்வெளியில் ஓடுகின்றான்.



வரை (varai)

draw

வினிதா படம் வரைகின்றாள்.



படி (padi)

read

அருண் கதைப்புத்தகம் படிக்கின்றான்.



# உதவு (uthavu)

help

கோகுல் செல்விக்கு எழுந்திருப்பதற்கு உதவுகின்றான்.



# நினை (ninai)

think

‘குருவிகள் எப்படிப் பறக்கின்றன?’என்று நினைக்கின்றான்.



குடி (kudi)

drink

சிறுமி பழச்சாறினை உறிஞ்சிக் குடிக்கின்றாள்.

சாப்பிடு (saappidu)

eat



பழங்களை விரும்பிச் சாப்பிடுகின்றாள்.



எழு (ezhu)

awake

காலையில் எழுந்ததும் சூரியனைப் பார்க்கின்றாள்.

தூங்கு (thoongu)

sleep



சிறுமி பொம்மையுடன் தூங்குகின்றாள்.



எழுது (ezhuthu)

write

அமுதா அழகாக எழுதுவாள்.



உரையாடு (uraiyadu)

conversation

குழந்தைகள் விளையாடுவது குறித்து உரையாடுகின்றனர்.



முகர் (mugar)

smell


ரோஜாப் பூவினை முகர்ந்து பார்க்கின்றான்.

சுவை (suvai)

taste



சண்முகம், மிட்டாயைச் சுவைத்து மகிழ்கின்றான்.



விளையாடு (vilaiyadu)

play

மணி, நாய்க்குட்டியுடன் விளையாடுகின்றான்.

பாடு (paadu)

sing



‘தோசையம்மா’ பாடலை அழகாகப் பாடுகின்றான்.



# வெற்றிபெறு (vetriperu)

win

முத்து, ஓவியப்போட்டியில் வெற்றிபெற்றான்.



# கொடு (kodu)

give

பிறந்தநாளுக்குப் பரிசு கொடுக்கின்றான்.



# இழு (izhu)

pull

கயிற்றினை இழுத்து விளையாடுகின்றான்.



# தள்ளு (thallu)

push

சிறுவன் வண்டியைத் தள்ளிக்கொண்டு செல்கின்றான்.



அழு (azhu)

cry

குழந்தை அழுவதைப் பார்க்கின்றான்.

சிரி (siri)

laugh



செம்மறியாட்டைப் பார்த்துச் சிரிக்கின்றான்.



மூடு (moodu)

close

பொம்மைகளை வைத்து பெட்டியை மூடுகின்றான்.



திற (thira)

open

ஊதலை எடுப்பதற்காகப் பெட்டியைத் திறக்கின்றாள்.



குதி (kuthi)

jump

பூக்களைப் பார்த்ததும் மகிழ்ச்சியில் குதிக்கின்றான்.



பேசு (pesu)

speak

சோமு தொலைபேசியில் பாட்டியுடன் பேசுகின்றான்.



# பிடி (pidi)

catch

ஆனந்த் பலூன்களைப் பிடித்துக்கொண்டிருக்கின்றான்.

# விடு (vidu)

release/leave



பட்டாம்பூச்சியைப் பறப்பதற்கு விடுகின்றான்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com